செ.வெ. எண்: 412 4/07/2011

# பத்திரிகைச் செய்தி

சென்னை மாவட்டத்தில் இயங்கும் சைதாப்பேட்டை M.C. ராஜா கல்லூரி மாணவர் விடுதி குறித்து 4.7.2011 தினமலர் பத்திரிக்கையில் வெளிவந்த செய்தி தொடர்பாக அவசர ஆய்வுக்கூட்டம் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் தலைமையில் கூடி விடுதியின் செயல்பாடுகள் குறித்து விவாதிக்கப்பட்டது. இதில் ஆதிதிராவிடர் நல ஆணையர், சென்னை மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் மற்றும் சென்னையில் இயங்கும் 22 விடுதி காப்பாளர் மற்றும் காப்பாளினிகள் கலந்து கொண்டார்கள். விடுதிகளின் செயல்பாடுகள் குறித்தும், குறிப்பாக அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, கழிவறை மற்றும் சுகாதார வசதிகள் செய்ய அரசால் ரூ.657.70 இலட்சம் நிதி ஒதுக்கீடு வழங்கி அதில் ரூ.109.40 இலட்சம் M.C. ராஜா விடுதிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது விடுவிக்கப்பட்ட ரூ.55.00 இலட்சம் தொகையில் M.C. ராஜா விடுதிக்கு ரூ.7.00 இலட்சம் மதிப்பீட்டில் அடிப்படை வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன.

M.C. ராஜா விடுதிக்கு ஒதுக்கப்பட்டுள்ள ரூ.109.40 இலட்சத்தில் விடுதியில் செராமிக் டைல்ஸ் அமைக்கும் பணி, மேல் நிலை நீர்தேக்க தொட்டி அமைத்தல், மாணவர்களுக்கு விளையாட்டு சாதானம் வாங்குதல், கூடை பந்து மற்றும் கைப்பந்து மைதானம் அமைத்தல்,நூலகம், பாத்திரங்கள் மற்றும் கொதிகலன்கள் அமைத்தல் அனைத்து அறைகளில் புதிய மின் இணைப்புகள் சரிசெய்தல், புதியதாக மின் விசிறிகள், குழல் விளக்குகள் பொருத்துதல், மாணவர் அறையில் கபோர்டு அமைத்தல், மேல் தளத்தில் தட்டை ஓடுகள் பதிக்கும் பணி செய்தல், உணவு அருந்தும் இடத்தில் மேஜை மற்றும் நாற்காலிகள் அமைக்கப்படவுள்ளன.

விடுதியில் அனுமதியில்லாமல் வெளியாட்கள் தங்குவதை தடுக்கும் பொருட்டு நடவடிக்கை எடுக்க சென்னை காவல் துறை ஆணையருக்கு கடிதம் வாயிலாக பரிந்துரைக்கப்பட்டது. மேலும் காலியாக உள்ள அரசு அனுமதிக்கப்பட்ட சமையலர் மற்றும் தூய்மை பணியாளர்கள் பணியிடங்களை நிரப்புவதற்கும், மாணவர்களுக்கு அட்டவணைப்படி உணவு வழங்கவும், விடுதியை சுத்தமாக பராமரிக்கவும், விடுதியில் காப்பாளர்கள் தங்கி பணியாற்றவும் காப்பாளர் / காப்பாளினிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டது.

வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9